நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தென்காசி
முன்னிலை, திருமதி.S.முத்து லெட்சுமி, பி.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர், தென்காசி
2026 ம் வருடம் மார்ச் திங்கள் 10 ம் நாள் செவ்வாய்கிழமை
குற்றப்பலவகை மனு எண்.366/2026
CNR.No.TNTS02-0001163-2026
IN
குற்ற எண்.59/2026

அர்மான் சாலிக், 27/26,
த.பெ.சேக் மொகைதீன் ... மனுதாரர்/எதிரி

/எதிர்/

அரசுக்காக – காவல் உதவி ஆய்வாளர்,
கடையநல்லூர் கா.நி.கு.எண்.59/2026 ... எதிர்மனுதாரர்/புகார்தாரர்

இம்மனு இறுதியான விசாரணைக்காக இன்று இந்நீதிமன்றத்தில் வந்தபோது மனுதாரருக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எம்.மாடசாமி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரருக்காக கற்றறிந்த அரசு உதவி வழக்கறிஞர் நிலை-II அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரைகளைக் கேட்டறிந்தும் மற்றும் வழக்கு ஆவணங்கள் அனைத்தையும் பார்வையிட்டு பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும் ...

## உத்தரவு

மனுதாரர்/எதிரிக்கு பிரிவு 480 BNS ன் கீழ் பிணை வழங்க வேண்டி பிணை மனு தாக்கல் செய்துள்ளார்.

**2. மனுவின் சுருக்கம் :-**

மனுதாரருக்கு எதிராக U/s.304 BNS ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் கடந்த 18.02.2026 முதல் நீதிமன்ற காவலில் இருந்து வருவதாகவும், மனுதாரர் எவ்வித குற்ற செயல்களிலும் ஈடுபடவில்லை என்றும், மனுதாரர் தலைமறைவாக மாட்டார் என்றும், மனுதாரர் ஜாமீன்தாரர்களை முன்னிருத்த தயாராக இருக்கிறார் என்றும் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. அரசு தரப்பு பதிலின் சுருக்கம் :-**

வழக்கானது புலன் விசாரணையில் இருந்து வருகிறது என்றும், மேற்படி எதிரிக்கு பிணை வழங்கினால் மீண்டும் இதே குற்றத்தை செய்யக்கூடும் என்பதாலும், சாட்சிகளை மிரட்டி கலைக்க கூடும் என்பதாலும், முறையாக விசாரணைக்கு

ஆஜராகாமல் தப்பி சென்றுவிடுவார் என்றும், எனவே எதிரிக்கு பிணை வழங்க ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தீர்வு** :–

4. ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும் போது, மனுதாரர்/எதிரி கடந்த 18.02.2026 முதல் நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார் என்பது தெரியவருகிறது. முதல் தகவல் அறிக்கையில், 18.02.2026 ம் தேதி தானும் தன் தெரு அருணாசலபாண்டியன் மனைவி சுப்பம்மாள் என்பவரும் கடையநல்லூர் தினசரி மார்கெட்டுக்கு சென்று காய்கறிகள் வாங்கிக்கொண்டு திரும்ப வீட்டுக்கு செல்ல வேண்டி மதியம் சுமார் 1 3/4 மணிக்கு கடையநல்லூர் போலீஸ் ஸ்டேசன் தெருவில் தெற்கிலிருந்து வடக்காக கங்கா கோல்டு கடை பக்கம் நடந்து போகும் போது கை வலி ஏற்பட்டதால் காய்கறி பையை கீழே வைத்துவிட்டு திரும்பவும் பையை தூக்கிகொண்டு நடந்து போகும்போது தனக்கு பின்னால் சுமார் 25 வயது மதிக்கத்தக்க ஒரு ஆண் பேண்டு சட்டை போட்டு நடந்து வந்து ஒரு ஆள், திடீரென தனது கழுத்தில் கிடந்த தங்க தாலி செயினில் உள்ள வெள்ளி கம்பில கோர்க்கப்பட்ட தாலி, தாலி குண்டுகள், காசுகள் ஆகியவற்றுடன் மொத்தம் சுமார் 67 கிராம் எடையுள்ள தாலி செயினை அத்துக்கொண்டு ஓடினான் என்றும், உடனே தானும், சுப்பம்மாளும் செயினை அத்துட்டு ஓடுரான், செயினை அத்துட்டு ஓடுரான் என்று சத்தம் போட்டுக்கொண்டே தானும் அவனுக்கு பின்னால் ஓடினதாகவும், கொஞ்ச தூரத்தில் அந்த இடத்தில் வேலை செய்து கொண்டிருந்த இசக்கிராஜும், முப்புடாதி என்பவரும் சேர்ந்து அவனை பிடித்தார்கள் என்றும், அதன் மதிப்பு ரூ.4 லட்சம் இருக்கும் என்றும் கொடுக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதைக் கருத்தில் கொண்டும், மேலும், அரசு தரப்பில், வழக்கானது புலன் விசாரணையில் இருந்து வருகிறது என்றும், மேற்படி எதிரிக்கு பிணை வழங்கினால் மீண்டும் இதே குற்றத்தை செய்யக்கூடும் என்பதாலும், சாட்சிகளை மிரட்டி கலைக்க கூடும் என்பதாலும், முறையாக விசாரணைக்கு ஆஜராகாமல் தப்பி சென்றுவிடுவார் என்றும் பதில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதைக் கருத்தில் கொண்டும், வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில் கொண்டும், நீதியின் நலனைக் கருத்தில் கொண்டும் மனுதாரர்/எதிரிக்கு பிணை வழங்கினால் அது நீதியின்பால் உகந்ததாக இருக்காது என

இந்நீதிமன்றம் முடிவு செய்து, மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

முடிவில், இம்மனு மேற்சொன்னவாறு தள்ளுபடி செய்யப்படுகிறது.

இத்தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு, பின்னர் 2026 ம் வருடம் மார்ச் திங்கள் 10 ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

S MUTHU LAKSHMI

Digitally signed by S MUTHU LAKSHMI
Date: 2026.03.10 14:36:26 +0530

நீதித்துறை நடுவர்,
தென்காசி.